# பலூன் வியாபாரி மீது 13 குற்றப்பதிவுகள் காவல் துறை விசாரிக்கிறது



கோலாலம்பூர், ஏப். 6-
நோன்புப் பெருநாள் ரமலான் சந்தையின் போது அமலாக்க அதிகாரிகளால் தாக்கப்பட்டதாக கூறப்படும் அந்த பலூன் வியாபாரி மீது ஏற்கெனவே காவல் துறையில் 13 குற்றப்பதிவுகள் உள்ளன.

அவருக்கு எதிராக 3 குற்ற புலனாய்வு விசாரணை அறிக்கை திறக்கப்பட்டிருக்கிறது என்று புக்கிட் அமான் காவல் துறை தலைமையகத்தின் குற்றப்புலனாய்வு பிரிவின் இயக்குநர் முகமட் சுஹைலி தெரிவித்தார்.

நோன்பு மாதத்தை முன்னிட்டு கோலாலம்பூரில் ஜாலான் துவாங்கு அப்துல் ரஹ்மான் சாலையில் தற்காலிமாக ரமலான் சந்தை அமைக்கப்பட்டிருந்தது.

கடந்த மார்ச் 28 ஆம் தேதி அந்த சந்தையில் உள்ள கடைகளை சோதனை செய்ய கோலாலம்பூர் மாநகராட்சி மன்ற அமலாக்க பிரிவு அதிகாரிகள் சென்றிருந்தனர். முறையான அனுமதி இல்லாமல் சட்டவிரோதமாக வியாபாரம் செய்து கொண்டிருந்த வணிகர்களுக்கு அபராத தொகை விதித்தனர். அப்போது லைசென்ஸ் இல்லாமல் பலூன்களை விற்று கொண்டிருந்த ஒருவரை மடக்கி விசாரணை நடத்தினர்.

அப்போது அவருக்கும் அதிகாரிகளுக்கும் இடையே மூண்ட வாக்குவாதம் கைகலப்பில் முடிந்தது. அதிகாரிகளால் தாக்கப்பட்ட அவர் பலத்த காயமடைந்தார் என்று பரபரப்பான செய்திகள் வெளியாகின.

இந்நிலையில் சம்பந்தப் பட்ட பலூன் வியாபாரி விசாரிக்கப்பட்டார். அவருக்கு எதிராக ஏற்கெனவே காவல் துறையில் 13 குற்றப்பதிவுகள் உள்ளன. அவற்றில் 9 குற்றப்பதிவுகள் போதைப் பொருள் சம்பந்தப்பட்டவை என்று தெரிய வந்ததாக முகமட் சுஹைலி தெரிவித்தார். அதே சமயத்தில் மார்ச் 28 ஆம் தேதி நிகழ்ந்த கைகலப்பு சம்பவம் தொடர்பாக அந்த வியாபாரி மீது 3 புகார்கள் செய்யப்பட்டு இருந்தன.

பணியில் இருந்த அதிகாரி களுக்கு இடையூறாக இருந்தது, மிரட்டல் விடுத்தது மற்றும் தாக்க முயன்றது ஆகியவை தொடர்பாக குற்ற வியல் சட்டம் செக்ஷன் 186 விதியின் கீழ் விசாரணை நடத்தப்படும் என்று சுஹைலி கூறினார்.